
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 185 | உள்ளூர் - 04.07.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 185 | வெளியூர் - 05.07.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**‘சகல ஐஸ்வர்ய பிராப்தி யோகம்:’ சில ராசிகளுக்கு அற்புதம்!**

**பட்டதாரிகளுக்கு SBI-யில் 1,500 வேலைவாய்ப்புகள்!**

**வைகை செல்வன் த.வெ.க.வில் இணைகிறார்...!**

**பாகிஸ்தானில் தற்கொலைப்படை தாக்குதல்; பலி -30...!**

## ராஜஸ்தானில் பிரதமர் மோடி பிஸி! ரூ.1.06 லட்சம் கோடி வளர்ச்சித் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணிப்பு!




புதுடெல்லி, ஜூலை. 04–

பிரதமர் நரேந்திர மோடி இன்று ராஜஸ்தானில் பல்வேறு முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று, மாநில வளர்ச்சிக்கு புதிய ஊக்கத்தை அளிக்கும் திட்டங்களை தொடங்கி வைத்தார். மொத்தம் ரூ.1.06 லட்சம் கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டி, நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

முதலில் ஜோத்பூரில் புதிதாக கட்டப்பட்ட விமான நிலைய முனையக் கட்டிடத்தை திறந்து வைத்தார். ரூ.480 கோடி செலவில் கட்டப்பட்ட இந்த முனையம் ஆண்டுக்கு 20 லட்சம் பயணிகளை கையாளும் திறன் கொண்டதாகும். மேலும், பிராந்திய விமான சேவையை விரிவுபடுத்தும் மாற்றியமைக்கப்பட்ட உடான் (UDAN) திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பாலோத்ரா மாவட்டத்தின் பச்சப்த்ராவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தியாவின் முதல் கிரீன்ஃபீல்டு ஒருங்கிணைந்த எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். சுமார் ரூ.79,450 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளாகம் இந்திய எரிசக்தி துறையில் முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது.

மேலும், ஜெய்ப்பூர் மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய பிரதமர், சாலை, ரயில்வே, மின்சார பரிமாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நகர்ப்புற போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளின் திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

ராஜஸ்தானில் அமைக்கப்பட்டுள்ள 1,000 மெகாவாட் பிகானேர் சூரிய மின் திட்டம், 300 மெகாவாட் கர்ணிசார் சூரிய மின் திட்டம் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சார பரிமாற்ற அமைப்புகளையும் நாட்டுக்கு அர்ப்பணித்தார். இதன் மூலம் மாநிலத்தின் மின்சார உற்பத்தி மற்றும் பசுமை ஆற்றல் திறன் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுத் துறைகளில் தேர்வு செய்யப்பட்ட சுமார் 54 ஆயிரம் இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் பிரதமர் வழங்கினார். வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு மத்திய அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர், உள்கட்டமைப்பு, தொழில், விமானப் போக்குவரத்து மற்றும் பசுமை எரிசக்தி துறைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ராஜஸ்தானின் பொருளாதார வளர்ச்சியை மேலும் வேகப்படுத்தும் என்று கூறினார்.

ராஜஸ்தான் பயணத்தை முடித்த பின்னர், பிரதமர் குஜராத்தின் சானந்த் நகருக்கு சென்று, இந்தியாவின் செமிகண்டக்டர் உற்பத்தித் துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்த CG Semi OSAT தொழிற்சாலையை திறந்து வைத்தார்.

## தமிழகம் புதிய சாதனை நோக்கி!

# பாதுகாப்பு மின்னணு உற்பத்தியில் ரூ.37,000 கோடி இலக்கு! 2040-க்குள் நாட்டின் முன்னணி மாநிலமாகும்!

## வேலைவாய்ப்பு, முதலீட்டில் புதிய அத்தியாயம்!!




புதுடெல்லி, ஜூலை. 04–

தமிழகம், பாதுகாப்பு மின்னணு உற்பத்தித் துறையில் நாட்டின் முன்னணி மாநிலமாக உருவெடுக்கத் திட்டமிட்டுள்ளது. 2040ஆம் ஆண்டுக்குள் இந்தத் துறையில் ஆண்டுக்கு ரூ.37,000 கோடி மதிப்பிலான உற்பத்தி வாய்ப்பை எட்டும் திறன் தமிழகத்திற்கு இருப்பதாக டிஆர்டிஓ (DRDO) தெரிவித்துள்ளது. தற்போது 2030ஆம் ஆண்டில் ரூ.11,500 கோடியாக இருக்கும் உற்பத்தி திறனை, அடுத்த 10 ஆண்டுகளில் மூன்று மடங்குக்கும் அதிகமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடம் (Defence Industrial Corridor), புதிய முதலீடுகள், மேம்பட்ட தொழில்நுட்ப உற்பத்தி, ஆராய்ச்சி மையங்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு ஆகியவை இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2040க்குள் இந்தியாவின் பாதுகாப்பு மின்னணு உற்பத்தியில் 25 சதவீத பங்கை தமிழகம் பெறும் இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதோடு, உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியிலும் தமிழகம் புதிய சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எல் நினோ தாக்கம்: நாடு முழுவதும் நீர்நிலைகளை கண்காணிக்க அமித்ஷா உத்தரவு!



புதுடெல்லி, ஜூலை. 04–

எல் நினோ காலநிலை தாக்கத்தால் நாட்டின் பல பகுதிகளில் மழைப்பொழிவு குறைவு, நீர்ப்பற்றாக்குறை மற்றும் வறட்சி அபாயம் அதிகரிக்கக்கூடும் என்ற எச்சரிக்கையைத் தொடர்ந்து, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவசர ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில், மாநில அரசுகள் அனைத்து ஏரிகள், அணைகள், குளங்கள் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும்,

ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் முன்கூட்டியே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார். குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கும், விவசாயத் தேவைகளுக்கு நீர் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நீர்நிலைகளின் இருப்பு, நீர்மட்ட மாற்றம் மற்றும் மழை நிலவரம் குறித்து மாநிலங்கள் தினசரி கண்காணிப்பு மேற்கொண்டு மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் சேமிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## லஞ்ச வேட்டையில் ஒரே நாளில் ரூ.58 லட்சம் ..!




சென்னை, ஜூலை. 04–

தமிழகம் முழுவதும் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பல்வேறு அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். சென்னை உள்ளிட்ட சுமார் 40 இடங்களில் நடைபெற்ற இந்த சோதனையில், கணக்கில் வராத ரூ.57.98 லட்சம் ரொக்கம் சிக்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், முக்கிய ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனை விவரங்களும் ஆய்வுக்காக கைப்பற்றப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்ட பணம் தொடர்பாக அதிகாரிகளிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நடவடிக்கை மாநிலம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## த.வெ.க.வில் இணைந்தவர்கள் முதலமைச்சர் விஜய்யை சந்திக்கின்றனர்!



சென்னை, ஜூலை. 04–

த.வெ.க.வில் சமீபத்தில் இணைந்த முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.பி.க்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்களை, முதலமைச்சர் விஜய் சந்தித்து, அவர்களுடன் புகைப்படம் எடுக்க முடிவு செய்திருந்தார். இதற்காக முதலமைச்சர் விஜய் இன்று மாலை சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்துக்கு வருகிறார். அங்கு அவர்களை முதலமைச்சர் விஜய் சந்தித்து பேசுகிறார்.

அப்போது மேலும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் முதலமைச்சர் விஜய் முன்னிலையில் த.வெ.க.வில் இணைகிறார்கள். அதன்பிறகு கட்சியில் ஏற்கனவே இணைந்த முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.பி.க்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் 100 பேருடன் முதலமைச்சர் விஜய் புகைப்படம் எடுத்துக்கொள்கிறார்.

## தி.மு.க. எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணனுக்கு ஜாமீன்; 10 நாட்கள் காவல் நிலையத்தில் கையெழுத்திட உத்தரவு!



திருச்செந்தூர், ஜூலை. 04–

தமிழக முதல்–அமைச்சர் விஜய் பற்றி அவதூறு பேசிய வழக்கில் கைது செய்யப்பட்ட தி.மு.க. எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணனுக்கு ஜாமீன் அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரில் தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்–அமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் கடந்த மாதம் 20–ந்தேதி நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் மற்றும் திருச்செந்தூர் தொகுதி எம்.எல்.ஏ.வான அனிதா ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பேசினார்.

**அவதூறு**

அப்போது அவர், தமிழக முதல்–அமைச்சர், சினிமா நடிகைகளோடு ஜாலியாக இருந்தார். அவரை கொண்டு வந்து சட்டசபையில் உட்கார வைத்த உடன் என்ன பேச வேண்டும் என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார் என்று அவதூறு பேசியதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக த.வெ.க. கட்சி நிர்வாகிகள் ஆத்தூர் போலீசில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி, அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மீது பி.என்.எஸ். 352 மற்றும் 353/2 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

**கைது**

இதற்கிடையே, முன் ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் அனிதா ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த மனு நேற்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், நேற்று காலை அவர் கைது செய்யப்பட்டார். இதன் பின்னர் அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, எஸ்.பி. அலுவலகத்தில் அவரிடம் 5 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டது. அதன்பின்னர் அவர் நீதிமன்றத்துக்கு அழைத்து செல்லப்பட்டார்.

**போலீசார் நெருக்கடி**

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், எனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யச்சொல்லி போலீசார் நெருக்கடி தருகிறார்கள். த.வெ.க.வில் சேரச்சொல்லி என்னை போலீசார் நிர்பந்திக்கிறார்கள். நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் ராஜினாமா செய்ய மாட்டேன். தி.மு.க.வில் உறுதியாக இருப்பேன். விஜய்யை மட்டுமல்ல, யாரையும் எதிர்ப்போம். காவல்துறை அராஜகம் செய்கிறது என கூறினார்.

இந்த சூழலில், தி.மு.க. எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் திருச்செந்தூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரிடம், மாஜிஸ்திரேட் ஒன்றரை மணிநேரம் விசாரணை நடத்தினார். இதனை தொடர்ந்து, அவரை சொந்த ஜாமீனில் விடுவித்து மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். ரூ.10 ஆயிரம் செலுத்தி விட்டு சொந்த ஜாமீனில் செல்லும்படி உத்தரவிட்ட அவர், 10 நாட்களுக்கு காவல் நிலையத்தில் கையெழுத்திடவும் உத்தரவு பிறப்பித்து உள்ளார்.

## பத்ரிநாத் கோவிலிலும் நன்கொடை திருட்டா? விசாரணைக்கு உத்தரவிட்ட கோவில் அறக்கட்டளை!



பத்ரிநாத், ஜூலை 04–

பக்தர்கள் வழங்கிய நன்கொடையில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, கோவில் அறக்கட்டளை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. நன்கொடை வசூல், கணக்குப் பதிவுகள் மற்றும் பாதுகாப்பு கேமரா காட்சிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. முறைகேடு உறுதியானால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உத்தரகண்டில் உள்ள பத்ரிநாத் கோவில் வளாகத்தில் பக்தர்கள் வழங்கிய நன்கொடையில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, கோவில் அறக்கட்டளை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. நன்கொடை வசூல், கணக்குப் பதிவுகள் மற்றும் பாதுகாப்பு கேமரா காட்சிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. முறைகேடு உறுதியானால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

த தலையங்கம் மதுரை மணி
சனிக்கிழமை 04.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 20-ம் தேதி

## ஐரோப்பாவை உலுக்கும் கொடிய வெப்ப அலை... 2,000 உயிரிழப்புகள்... மீண்டும் Red Alert!



ஐரோப்பா முழுவதும் கடந்த சில வாரங்களாக வரலாறு காணாத வெப்ப அலை தாக்கி வருகிறது. 40°C-ஐ தாண்டிய வெப்பநிலை பல நாடுகளில் பதிவாகி, இதுவரை 2,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் பிரான்சில் மட்டும் சுமார் 1,000 கூடுதல் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள்.

பிரான்ஸ், இத்தாலி, குரோஷியா உள்ளிட்ட நாடுகள் மீண்டும் அதிகபட்ச Red Alert எச்சரிக்கையை அறிவித்துள்ளன. இத்தாலியின் 27 நகரங்களில் 25 நகரங்கள் சிவப்பு எச்சரிக்கையின் கீழ் உள்ளன. ஜூலை 3 முதல் மீண்டும் 35°C முதல் 41°C வரை வெப்பநிலை உயரும் என வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

இந்த கடுமையான வெப்ப அலைக்கு "ஒமேகா பிளாக் (Omega Block)" எனப்படும் அரிய வானிலை அமைப்பே முக்கிய காரணம் என விஞ்ஞானிகள் விளக்குகின்றனர். உயர் காற்றழுத்த மண்டலம் ஒரு பகுதியில் வெப்பக் காற்றை நீண்ட நாட்கள் சிக்கவைத்து விடுவதால், தொடர்ந்து பல நாட்கள் கடும் வெப்பம் நிலவுகிறது.

ஜெர்மனியில் வரலாற்றிலேயே அதிக இரவு வெப்பநிலை பதிவாகியுள்ளது. இரவு நேரத்திலும் வெப்பம் குறையாததால் உடலுக்கு ஓய்வு கிடைக்காமல், வெப்பத்தால் ஏற்படும் உயிரிழப்பு அபாயம் அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். இங்கிலாந்திலும் மூன்றாவது வெப்ப அலை உருவாகும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெப்ப அலை மனிதர்களை மட்டுமல்லாமல் கால்நடை வளர்ப்பையும் கடுமையாக பாதித்துள்ளது. பன்றி மற்றும் பால் மாடுகளின் உற்பத்தி குறைந்ததால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பை சந்தித்து வருகின்றனர். ஆறுகளில் நீர்மட்டம் குறைவு, மின்சாரத் தேவை அதிகரிப்பு, ரயில் சேவைகள் பாதிப்பு, காட்டுத்தீ அபாயம் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு சிக்கல்களும் உருவாகியுள்ளன.

World Weather Attribution (WWA) ஆய்வின்படி, 50 ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய வெப்ப அலை நிகழ்வதே அரிதான ஒன்று. ஆனால் தற்போது காலநிலை மாற்றம் மற்றும் பசுமைக்குடில் வாயுக்களின் அதிகரிப்பு காரணமாக இதுபோன்ற தீவிர வெப்ப அலைகள் 200 முதல் 300 மடங்கு அதிக வாய்ப்புடன் உருவாகின்றன.

பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், மரங்கள் வளர்த்தல், நகரங்களில் குளிரூட்டும் உள்கட்டமைப்பை மேம்படுத்தல், முதியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தல் ஆகியவை மட்டுமே எதிர்கால பாதிப்புகளை குறைக்க உதவும் என்று நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த உலக நாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், இதுபோன்ற கொடிய வெப்ப அலைகள் எதிர்காலத்தில் வழக்கமான நிகழ்வாக மாறும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் பேச்சுவார்த்தை குழுவினருக்கு எதிராக சதித்திட்டம் என்ற செய்தி முற்றிலும் பொய்யானது: இஸ்ரேல்!



ஈரான், ஜூலை. 04-

ஈரான் பேச்சுவார்த்தை குழுவில் உள்ளவர்களை இஸ்ரேல் படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டுவதாக அமெரிக்க பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி பொய்யானது என்று நெதன்யாகு அலுவலகம் தெரிவித்துள்ளது.

4 மாதங்கள் தொடர்ந்த ஈரான்- அமெரிக்கா போர், கடந்த வாரம் ஏற்பட்ட புரிந்துணர்வால் முடிவுக்கு வரும் தருவாயில் உள்ளது. சுவிட்சர்லாந்தில் கடந்த வாரம் நிரந்தர அமைதிக்கான பேச்சுவார்த்தையின் முதல் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதனிடையே கத்தார் தலைநகர் தோஹாவிலும் இரு நாட்டு குழுக்கள் கூடி இந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தும் என கூறப்பட்டது. இருப்பினும் அதிகாரபூர்வமாக அல்லாமல் அமெரிக்கா- ஈரான் பிரதிநிதிகள் ரகசியமாக கூடி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே ஈரான் பேச்சுவார்த்தை குழுவின் 2 முக்கிய பிரதிநிதிகளை கொலை செய்ய இஸ்ரேல் சதித்திட்டம் தீட்டுவதாக அமெரிக்க உயர் அதிகாரிகள் எச்சரித்துள்ளதாக பிரபல நாளேடான வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டது. முன்னதாக நியூ யார்க் டைம்ஸ் நாளேடும் இதுபோன்றதொரு செய்தி அறிக்கையை வெளியிட்ட நிலையில் தற்போது வாஷிங்டன் போஸ்ட் அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் மற்றும் அமைதி பேச்சுவார்த்தைக்கு உதவி செய்து வரும் நாடுகளுக்கு இது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அமெரிக்க உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், ஈரான் குழுவில் இருக்கும் 2 முக்கிய தலைவர்களான அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்சி மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபப் ஆகியோர் இஸ்ரேலால் குறிவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

படுகொலைகள் ஏதேனும் அரங்கேறினால், அது அமைதிப் பேச்சுவார்த்தைகளை முற்றிலும் சீர்குலைத்து விடும் என்று அமெரிக்க அதிகாரிகள் அஞ்சுகின்றனர். எனவே ஈரானுக்கு இதுகுறித்து மத்தியஸ்தர்கள் மூலம் தனிப்பட்ட முறையில் அமெரிக்கா எச்சரித்துள்ளதாக செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதை இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அலுவலகத்தில் இருந்து வெளியான அறிக்கையில் "ஈரான் உடனான அமைதி பேச்சுவார்த்தைகளின் போது, ஈரானின் மூத்த பேச்சுவார்த்தையாளர்களை இஸ்ரேல் குறிவைக்கக்கூடும் என அமெரிக்க அதிகாரிகள் அஞ்சுவதாகக் கூறிய அமெரிக்க ஊடக அறிக்கையை இஸ்ரேல் வன்மையாக நிராகரிக்கிறது. மேலும், அந்த அறிக்கையை "போலிச் செய்தி", "உண்மையை முற்றிலுமாகத் திரித்துக் கூறப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டொனால்டு டிரம்புக்கு மிகவும் நெருக்கமான நட்பு நாடாக இஸ்ரேல் விளங்கி வருகிறது. நெதன்யாகுவும் நெருங்கிய நண்பராக இருந்து வருகிறார். இஸ்ரேல் லெபனான் மீது நடத்தும் தாக்குதல் அமெரிக்கா-ஈரான் இடையிலான பேச்சுவார்த்தையும் சீர்குலைக்கும் வகையில் உள்ளது. இதனால், நெதன்யாகுவை டார்கெட் செய்யும் வகையில் சில நேரங்களில் டிரம்ப் கடுமையாக விமர்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பயிர் கடன்களை முழுமையாக ரத்து செய்யக்கோரி விவசாயிகள் நூதன போராட்டம்!



நாகப்பட்டினம், ஜூலை. 04-

நாகப்பட்டினம் புதிய கடற்கரையில் தமிழக காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் இன்று காலை நூதனப் போராட்டம் நடைபெற்றது. மாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் விஜயராஜ், மாவட்ட செயலாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போராட்டத்தில், தேர்தல் வாக்குறுதிப்படி கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர் கடன்கள் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும், காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடகா அரசு அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தாமல், மவுனம் காக்கும் மத்திய அரசை கண்டித்தும் கடற்கரையில் திதி கொடுத்தனர். பின்னர் பிண்டம் கடலில் கரைத்து கோஷங்கள் எழுப்பி தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். நாகை கடற்கரையில் நடந்த இந்த நூதன போராட்டத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

## த.வெ.க. அரசை கவிழ்க்க ரூ.35 கோடி பேரம்: செந்தில் பாலாஜி ஆஜராக சென்னை போலீசார் சம்மன்!





சென்னை, ஜூலை. 04-

தமிழகத்தில் நடைபெற்று வரும் த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க, அக்கட்சி எம்.எல்.ஏ.க்களிடம் தி.மு.க. தரப்பில் பேரம் பேசப்பட்டதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகின. இது தொடர்பாக, ஊத்தங்கரை தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. டாக்டர் இளையராஜா, சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலத்தில் புகார் அளித்தார்.

அந்த புகார் மனுவில், த.வெ.க. அரசை கவிழ்க்க தன்னிடம் ரூ.35 கோடி பேரம் பேசியதாக கூறியிருந்தார். இந்த நிலையில், அவர் கூறிய தகவல்களின் அடிப்படையில், ஐ.பி.டி.எஸ். என்ற தேர்தல் கருத்து கணிப்பு நிறுவனத்தின் நிறுவனர் திருநாவுக்கரசு, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்களான சென்னை மேடவாக்கத்தை சேர்ந்த தியாகராஜன், பெசன்ட்நகரை சேர்ந்த நரேஷ், கரூரை சேர்ந்த ரமேஷ், கார்த்தி, சென்னை பள்ளிக்கரணையை சேர்ந்த செல்வன், மணபாக்கத்தை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் சீனிவாசன், அஸ்தினாபுரத்தை சேர்ந்த ராஜேஷ் ஆகிய 8 பேரை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில், த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க அக்கட்சி எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக பரபரப்பு வாக்குமூலம் அளித்தனர்.

**பூர்வீக வீட்டில் சம்மன்**

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராக சென்னை போலீசார் இன்று கரூர் மாவட்டம் ராமேஸ்வரப்பட்டியில் உள்ள அவரது பூர்வீக வீட்டில் சம்மன் அளித்தனர். இந்த சம்மனை செந்தில் பாலாஜியின் தந்தை பெற்றுக்கொண்டார்.

வரும் திங்கட்கிழமை, அதாவது ஜூலை 6-ந் தேதி ஆஜராகுமாறு அந்த சம்மனில் கூறப்பட்டுள்ளது.

## 23 பேர் பயங்கரவாதிகள்; உபா சட்டப்படி அறிவித்தது மத்திய அரசு!




புதுடில்லி, ஜூலை. 04-

ஜெய்ஷ்-இ-முகமது, லஷ்கர்-இ-தொய்பா அமைப்புகளுடன் தொடர்புடைய, பாகிஸ்தானை தளமாகக் கொண்ட 23 நபர்களை உபா சட்டத்தின் கீழ் 'பயங்கரவாதிகள்' என மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் இன்று அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டது.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் கூறி இருப்பதாவது: ஜெய்ஷ்-இ-முகமது மற்றும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்புகளுடன் தொடர்புடைய, பாகிஸ்தானை சேர்ந்த 23 பேர் சட்டவிரோத நடவடிக்கை தடுப்புச் சட்டத்தின் (உபா) கீழ் பயங்கரவாதிகளாக அறிவிக்கப் படுகிறார்கள்.

இந்த நபர்கள், பயங்கரவாத ஆட்சேர்ப்பு, ஊடுருவல், பயிற்சி, ட்ரோன்கள் மூலம் ஆயுதங்கள் வழங்குதல் மற்றும் ஜம்மு காஷ்மீரில் தாக்குதல்களைத் திட்டமிடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

23 நபர்களில், மூவர் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் நிறுவனர் ஹபீஸ் முஹம்மது சயீத்தின் நெருங்கிய கூட்டாளிகள். மூவர் 2016ம் ஆண்டு நக்ரோட்டாவில் உள்ள ராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள்.

இருவர் 2018ம் ஆண்டு சுன்ஜ்வான் ராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள். இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தானில் தற்கொலைப்படை தாக்குதல்; பலி -30...!




இஸ்லாமாபாத், ஜூலை. 04-

பலுசிஸ்தானில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் பாகிஸ்தானின் துணை ராணுவப் படையினர் 30 பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாவட்டத்தில் கடலோரக் காவல்படை முகாம் மீது தற்கொலை படைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் பாகிஸ்தானின் துணை ராணுவப் படையினர் 30 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த தாக்குதலுக்கு பலுச் விடுதலை ராணுவம் பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதல் காவல்படை முகாமை முற்றிலுமாக அழித்து விட்டோம், பாதுகாப்புப் படையினர் மத்தியில் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது என பலுச் விடுதலை ராணுவம் தெரிவித்துள்ளது.

தற்கொலைத் தாக்குதல் தொடர்பான 43 வினாடி வீடியோவையும் வெளியிட்டுள்ளது.



## சகல ஐஸ்வர்ய பிராப்தி யோகம்: சில ராசிகளுக்கு அற்புதமான காலம்!



ஜோதிடத்தில் கிரகங்களின் பெயர்ச்சிகள் மற்றும் சில கிரகங்களின் சேர்க்கை சிறப்பான ராசி யோகங்களை தரக்கூடியதாக இருக்கும். அந்த விதத்தில் 2026 ஜூலை மாதத்தில், குரு மற்றும் புதனாகிய எங்களுக்கு தாக்கம் காரணமாக சக்தி வாய்ந்த சில யோகங்கள் உருவாக உள்ளன. இந்த மாதத்தில் கஜகேசரி ராஜ யோகம், ஹம்ச ராஜ யோகம், பத்ர ராஜ யோகம், நவபஞ்சம திருஷ்டி யோகம் மற்றும் தசாங்க யோகம் ஆகியவை ஆகும்.ஜூலை மாதத்தில் கிரகங்களின் அமைப்பு மற்றும் அவை தரக்கூடிய யோகங்கள் காரணமாக பேராசைகளின் வாழ்க்கையில் அனைத்து துறைகளிலும் நேரம் பலன்களையும், தொட்டதெல்லாம் வெற்றியை தரக்கூடியதாக இருக்கும்.

**ரிஷப ராசி**

ரிஷப ராசி அன்பர்கள் ஜூலை மாதத்தில் மிகவும் சிறப்பான பலனை பெறுவார்கள். மூன்று முக்கிய ராஜயோகங்கள் உருவாகக்கூடிய இந்த காலத்தில், நீண்ட காலமாக தடைபட்டு வந்த அனைத்து வேலைகளையும் வெற்றிகரமாக முடிக்க முடியும். யோகங்கள் தரக்கூடிய அற்புத சூழல்களால் உங்களுடைய குடும்பத்தில் மகிழ்ச்சியும், குழந்தைகள் தொடர்பான கவலைகள் தீரும். உங்களுடைய நிதிநிலைமை குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்ற முடியும். உங்கள் ராசிக்கு நிதி நிலைமை முன்னேற்றமும், நிதி ஸ்திரத்தன்மையையும் வலுவான நிலையையும் அடைவார்கள்.

**கடக ராசி**

கடக ராசி அன்பர்களுக்கு இந்த ஜூலை மாதத்தில் உருவாகக்கூடிய 3 ராஜயோகங்கள் சிறப்பான பலனை தரக்கூடியதாக இருக்கும். குறிப்பாக உங்களுடைய சம்பாதிக்கும் திறனை அதிகரிக்கும். பல புதிய வடிவில் உங்களுக்கு பணம் வந்து சேரும். தேர்வுக்கு தயாராக கூடிய மாணவர்களுக்கு இந்த காலம் முன்னேற்றமும் பெரிய வெற்றி தரும். நீங்கள் முன்னர் செய்த முதலீடுகள் மூலம் நல்ல லாபத்தை விடுவீர்கள் உங்களுடைய எதிர்காலத்திற்காக சேமிக்க முடியும்.

**துலாம் ராசி**

துலாம் ராசி நண்பர்களுக்கு ஜூலை மாதத்தில் உருவாகும் சிறப்பான யோகங்கள், உங்களுடைய வீட்டில் மங்களகரமான நிகழ்வு நடக்க உதவும். குறிப்பு திருமணம் ஆகாதவர்களுக்கு இந்த காலத்தில் நல்ல திருமண வரன் தேடி வர உதவும். உங்களுடைய மன அமைதி அதிகரிக்கும். நீங்கள் செய்யக்கூடிய தொழிலில் எடுக்கும் முயற்சிகள் நல்ல முன்னேற்றத்தை தரும். நீண்ட காலம் விஷயங்களை செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிக ராசி**

விருச்சிக ராசி அன்பர்களுக்கு இந்த ஜூலை மாதத்தில் உருவாகும் யோகங்கள் உங்களுடைய பணியிடத்தில் மதிப்பையும், பாராட்டையும் பெற்று தரும். மேலதிகாரிகளின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். என காலத்திலேயே பதவி உயர்வு, சம்பளம் உயர்வுக்காக காத்திருக்கும் நபர்களுக்கு எதிர் பார்த்த நேரத்தில் கிடைக்கும். பிறரிடம் சிக்கி உள்ள, அல்லது நீங்கள் இழந்த பணத்தை மீண்டும் பெற முடியும். பொருளாதார ரீதியாக உங்களுக்கு மகிழ்ச்சியை தரக்கூடியதாக இருக்கும்.

**தனுசு ராசி**

தனுசு ராசி அன்பர்களுக்கு உங்கள் குடும்ப வாழ்க்கையில் மற்றும் தொழில் தொடர்பான செயல்பாடுகளை உங்கள் பொறுப்புகளை சிறப்பாக முடிக்க முடியாது. ராஜ யோகங்களின் சுப தாக்கத்தால் உங்களுடைய வருமானம் அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். இந்த காலத்தில் கூட்டுத்தொழில் செய்யக்கூடியவர்கள் பெரிய அளவில் லாபத்தை அடைவார்கள்.

**குறிப்பு:**

இங்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஜோதிடத் தகவல்களும் தீர்வுகளும் ஜோதிடம் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. இதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இத்தகவல்களைக் கருத்தில் கொண்டு முழுமையான விவரங்களைப் பெற, சம்பந்தப்பட்ட நிபுணரை அணுகுவது சிறந்தது.

## குற்றால அருவிகளில் அலைமோதும் சுற்றுலா பயணிகள் கூட்டம்!



தென்காசி, ஜூலை. 04-

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் தொடர்ந்து சாரல் மழை பெய்த தால் குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது. ஐந்தருவியில் ஐந்து கிளைகளிலும் மெயின் அருவியில் அனைத்து பகுதிகளிலும் பரவலாகவும் புலியருவியில் மூன்று கிளைகளிலும் பழைய குற்றால அருவிக்கும் சிற்றருவிக்கும் கணிசமாக தண்ணீர் அதிகரித்தது.

ஐந்தருவி, பழைய குற்றாலம், மெயின் அருவியில் நீண்ட வரிசையில் நின்று சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரிப்பால் அனைத்து அருவி பகுதிகளிலும் போலீஸ் பாதுகாப்பு அதிக அளவில் போடப்பட்டிருந்தது. குற்றாலம் மற்றும் அதனை ஒட்டி உள்ள பகுதிகளில் விட்டு விட்டு சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் சீசன் களைகட்டி உள்ளது.




## உங்க உடல் எடையை சட்னு குறைக்கணுமா? அப்போ இதை சாப்பிட்டு பாருங்க...!



உடலில் உள்ள கொழுப்பைக் குறைத்து, உடல் எடையை கட்டுப்படுத்தி ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற ஆசை யாருக்குத் தான் இருக்காது? ஆனால் அதை எப்படிச் செய்வது என்பது பலருக்கு தெரியாமல் இருக்கிறது. இதனால் சிலர் அதிக பணம் செலவிட்டு பல விதமான பவுடர்களை வாங்கி பயன்படுத்துவார்கள் அல்லது ஜிம்முக்கு சென்று தேவையற்ற செலவுகளைச் செய்வார்கள்.

ஆனால் உண்மையில், நம் வீட்டிலேயே குறைந்த விலையில் கிடைக்கும் இயற்கை பொருட்களை பயன்படுத்தி உடலில் தேங்கியிருக்கும் தேவையற்ற கொழுப்பை குறைக்க முடியும் என்று சொன்னால் நம்ப முடியுமா? ஆனால் அதுதான் உண்மை. பலரும் உடல் எடையை குறைக்க பல்வேறு முறைகளை முயற்சி செய்து பார்த்திருப்பார்கள். ஆனால் அவை பல நேரங்களில் எதிர்பார்த்த பலனை தராமல் போயிருக்கும். அத்தகைய சூழலில் இயற்கையான உணவுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட எளிய சமையல் முறைகள் நல்ல மாற்றாக இருக்கும். அதில் ஒன்றாக கொள்ளு சட்னி குறிப்பிடப்படுகிறது. இதை சரியான முறையில் தயாரித்து உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் எடை கட்டுப்பாட்டிற்கு உதவக்கூடும்

முதலில் ஒரு பாத்திரத்தில் கொள்ளு சேர்த்து வறுத்தெடுத்துக்கொள்ள வேண்டும். அதன்பின் அதே பாத்திரத்தில் சிறிது எண்ணெய் ஊற்றி உளுத்தம் பருப்பு மற்றும் கடலைப் பருப்பு சேர்த்து பொன்னிறமாக வதக்க வேண்டும். பின்னர் அதனுடன் பூண்டு, வெங்காயம் மற்றும் காய்ந்த மிளகாய் சேர்த்து நன்றாக வதக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு பின் வறுத்த கொள்ளு, புளி, தேங்காய் துருவல், பெருங்காயம் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.

இந்த அனைத்து பொருட்களையும் சிறிது ஆறவைத்த பிறகு மிக்ஸியில் சேர்த்து மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். இறுதியாக கடுகு, எண்ணெய் மற்றும் கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, அரைத்த சட்னியுடன் கலந்து விட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் கொள்ளு சட்னி இட்லி மற்றும் தோசைக்கு மிகவும் சுவையாக இருக்கும்.

## லண்டன் புறப்பட்டார் மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஜூலை 04– தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தவெக 108 இடங்களை கைப்பற்றி தனி பெரும் கட்சியாக உருவெடுத்து ஆட்சி அமைத்துள்ளது. முதல்–அமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசு ஆட்சி அமைத்து 40 நாட்களை கடந்து உள்ள நிலையில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை, பயிர் கடன் தள்ளுபடிக்கு எதிராக விவசாயிகள் போராட்டம், பாலியல் வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு என எதிர் கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது. அனிதா ராதாகிருஷ்ண கைது, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிங்கப்பூர்



மருத்துவமனையில் அனுமதி என தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு சென்று கொண்டிருக்கிறது.

மறுபுறம், அதிமுகவில் உட்கட்சி மோதல் காரணமாக கட்சி முன்னால் அமைச்சர்கள், எம் எல் ஏக்கள், நிர்வாகிகள் என பலரும் தமிழக வெற்றி கழகத்தில் ஐக்கியமாகி வருகின்றனர். இதனால் திமுக மற்றும் அதிமுக உள்ளிட்ட கட்சிகள் விஜய் தலைமையிலான தாவிக்கு அரசு குதிரை பேரத்தில் ஈடுபடுவதாக உள்ளிட்ட குற்றசாட்டுகளை முன்வைத்து தமிழக அரசியல் களம் அடுத்தடுத்த நகர்வுகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய பரபரப்பான அரசியல் சூழலில் முன்னாள் முதலமைச்சரும் திமுக தலைவருமான மு க ஸ்டாலின் தற்பொழுது லண்டன் புறப்பட்டு சென்றுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் மகனும், மு.க.ஸ்டாலினின் பேரனுமான இன்பநிதி இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் விளையாட்டு மேம்பாடு தொடர்பான உயர்கல்வி பயின்று வருகிறார். அவரது பட்டம் ளிப்பு விழா இந்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதில் பங்கேற்பதற்காகவே மு.க.ஸ்டாலின் குடும்பத்துடன் லண்டன் புறப்பட்டு சென்றுள்ளார்.

## வேலை வாய்ப்பு

## பட்டதாரிகளுக்கு SBI–யில் 1,500 வேலைவாய்ப்புகள்!




மொத்த காலியிடங்கள்: 1,500
ஆன்லைன் விண்ணப்ப காலம்:
தொடக்கம்: 18 ஜூன் 2026
கடைசி தேதி: 8 ஜூலை 2026
அதிகாரப்பூர்வ விண்ணப்ப தளம்:
SBI Careers PO Re Official Website: https://sbi.bank.in/cruitment

**கல்வித்தகுதி**

ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு (Any Degree).
இறுதியாண்டு மாணவர்களும் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் விண்ணப்பிக்கலாம்.
வயது வரம்பு
21 முதல் 30 வயது (01.04.2026 அடிப்படையில்)
அரசு விதிகளின்படி SC/ST/OBC/PwBD உள்ளிட்டோருக்கு வயது தளர்வு உண்டு.

**தேர்வு முறை**

1. Preliminary Examination
2. Main Examination
3. Psychometric Test
4. Group Exercise
5. Interview

**ஆரம்ப சம்பளம்**

அடிப்படை ஊதியம்: ₹48,480 (தொடக்க Basic Pay)
DA, HRA மற்றும் பிற அலவன்ஸ்களும் வழங்கப்படும்.

**பணியிடம்**

இந்தியா முழுவதும் SBI கிளைகள்.
முக்கிய தேர்வு பாடங்கள்
Prelims
English Language
Quantitative Aptitude
Reasoning Ability
Mains
Reasoning & Computer Aptitude
Data Analysis & Interpretation
General/Economy/Banking Awareness
English Language
Descriptive Test (Letter & Essay)
முக்கிய தேதிகள்
விண்ணப்பம் தொடக்கம்: 18.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 08.07.2026
Preliminary தேர்வு: ஆகஸ்ட் 2026 (தற்காலிக அட்டவணை)

## வைகை செல்வன் த.வெ.க.வில் இணைகிறார்...!

சென்னை, ஜூலை. 04– வைகை செல்வன் இன்று மாலை த.வெ.க.வில் இணைய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. முதலமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து வைகை செல்வன் தன்னை த.வெ.க.வில் இணைத்துக் கொள்ள உள்ளார். அ.தி.மு.க.வில் நீண்ட காலம் பணியாற்றி இருந்த வைகை செல்வன் இலக்கிய ஆர்வம் கொண்டவர் ஆவார். பல்வேறு புத்தகங்களையும் அவர் எழுதி இருக்கிறார். அ.தி.மு.க. சார்பில் பல்வேறு விவாதங்களிலும் அவர் பங்கேற்று உள்ளார்.

**இலக்கியவாதி To த.வெ.க செய்தித் தொடர்பாளர்?**

இந்த நிலையில் வைகை செல்வன் த.வெ.க.வில் இணைந்து புதிய அரசியல் பயணத்தை தொடங்க உள்ளார். அந்த கட்சியில் அவருக்கு செய்தி தொடர்பு பிரிவில் முக்கிய பொறுப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது.



மகாபலிபுரத்தில் அண்மையில் நடைபெற்ற த.வெ.க–வின் பிரம்மாண்ட இணைவு விழாவில் முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர், எம்.எஸ்.எம். ஆனந்தன், வளர்மதி உள்ளிட்ட பல முக்கிய தலைவர்கள் த.வெ.க–வில் இணைந்தனர். அவர்களைத் தொடர்ந்து வைகை செல்வனும் தற்போது த. வெ.க–விற்கு மாறுவது தமிழக அரசியலில் த.வெ.க–வின் பலத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## 'வீடு புகுந்து தாக்குதல்': தமிழ்நாடு நிதியமைச்சர் மரிய வில்சன் 10-ந்தேதி கட்டாயம் ஆஜராக வேண்டும்: நீதிபதி உத்தரவு!

சென்னை, ஜூலை. 04– தமிழக வெற்றி கழகம் சார்பில், ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரிய வில்சன் தமிழக நிதி அமைச்சராக பதவி வகித்து வருகிறார்.

**தாக்குதல்**

இவரும், இவரது தந்தை நெஸ்டோர் ஆகியோர் சொத்து பிரச்சனை காரணமாக கடந்த 2022–ம் ஆண்டு ஆகஸ்ட் 8ந் தேதி இரவு 8 மணிக்கு புதுச்சேரி, எழில் நகரில் வசித்து வரும் அவரது அண்ணன் மரிய கிளோத் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று அண்ணன் மரிய கிளோத், அண்ணி கெரோலின் ஆகியோரை ஆபாசமாக திட்டி, உருட்டு கட்டையால் தாக்கினர். மேலும், கெரோலின் ஆடைகளை பிடித்து இழுத்து மானபங்கப்படுத்தி, "நாங்கள் நடத்தி வரும் செயின்ட் ஆண்டனி பள்ளி நிர்வாகத்தில் தலையிட்டால், குடும்பத்தோடு கொலை செய்துவிடுவோம்" என மிரட்டிவிட்டு தப்பிச் சென்றனர்.

**வழக்கு**

படுகாயமடைந்த மரிய கிளோத் மற்றும் கெரோலினை லாஸ்பேட்டை போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் லாஸ்பேட்டை போலீசார் அத்துமீறி நுழைதல், தாக்குதல், சேதம் விளைவித்தல், ஆயுதமான ஆயுதத்தால் காயம் ஏற்படுத்துதல், பெண்ணை மானபங்கப்படுத்துதல், கொலை மிரட்டல் மற்றும் கூட்டுச்சதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து மரிய வில்சன், நெஸ்டோர் ஆகியோரை கைது செய்து ஜாமினில் விடுவித்தனர்.

இந்த வழக்கு விசாரணை புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. வழக்கு விசாரணைக்காக பலமுறை வாய்தா வழங்கப்பட்ட போதிலும், மரிய வில்சன் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. கடந்த மாத வாய்தாவின் போதும் மரிய வில்சன்



ஆஜராகவில்லை.

**ஆஜராக உத்தரவு**

இந்த நிலையில் குற்றப்பத்திரிகையை நேரில் பெற ஜூலை 4–ந்தேதி சனிக்கிழமை நீதிமன்றத்தில் கட்டாயம் நேரில் ஆஜராக வேண்டும் என மாஜிஸ்திரேட்டு சேரலாதன் உத்தரவிட்டுள்ளார். அதனால், இன்று நடைபெறும் வழக்குக் விசாரணைக்கு தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன், அவரின் தந்தை நெஸ்டோர் ஆகியோர் நேரில் ஆஜராவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இன்றும் தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் ஆஜராகவில்லை. அவருக்கு பதிலாக அவரின் வக்கீல் சிவக்குமார் ஆஜரானார். அவர் நீதிபதி சேரலாதனிடம், தமிழகத்தில் பட்ஜெட் பணிகள் நடந்து வருவதால், மரியவில்சன் நேரில் ஆஜராக முடியவில்லை என விளக்கம் அளித்தார்.

**நீதிபதி கேள்வி**

அதற்கு நீதிபதி சேரலாதன், சனிக்கிழமை, விடுமுறை நாள் என்பதால்தான் ஆஜராகும்படி கூறினேன். இப்போதும் ஆஜராகவிட்டால் என்ன செய்வது? என கேள்வி எழுப்பினார். மேலும் வரும் 6–ந்தேதி கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என கூறினார். வக்கீல் சிவக்குமார், அன்றைய தினமும் ஆஜராக முடியாது என கூறினார். இதையடுத்து நீதிபதி சேரலாதன், வரும் 10–ந்தேதி கட்டாயமாக கோர்ட்டில் மரியவில்சன் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பித்தார். வழக்கு விசாரணை யின்போது புகார்தாரர் தரப்பில் வக்கீல் பிரவீன் ஆஜரானார்.

## ஆசிரியர் சிறப்பு தகுதி தேர்வு தாள் 1 தமிழகம் முழுவதும் தொடங்கியது!

சென்னை, ஜூலை. 04– தமிழகம் முழுவதும் 12,001 ஆண்கள், 49,385 பெண்கள், 1,321 மாற்றுத்திறனாளிகள் தகுதி தேர்வை எழுதுகின்றனர். சென்னையில் 10க்கும் மேற்பட்ட மையங்களில் ஆசிரியர் தகுதி தேர்வு தாள் 1 தேர்வு நடைபெற்று வருகிறது. ஜூலை. 05–ல் நடைபெறும் ஆசிரியர் தகுதி தேர்வு 2–ம் தாளை தேர்வை 613 மையங்களில் 1,67,743 தேர்வர்கள் எழுதுகின்றனர்.



பணியில் இருக்கும் ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் கடந்த 2025– ஆம் ஆண்டு உத்தரவிட்டது.

மேலும், அந்த ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் இருந்து இரண்டு ஆண்டிற்குள் அனைத்து ஆசிரியர்களும் தகுதிப் பெற வேண்டும் எனவும், அப்படி தகுதிப் பெற விரும்பாதவர்கள் அவர்களுக்கான சலுகைகளுடன் ஓய்வுப் பெற்று கொள்ளலாம் எனவும் தெரிவிக்க ப்பட்டிருந்தது.

## ஒட்டன்சத்திரத்தில் திருட்டு வழக்கு: 38 பவுன் நகை, கார், பைக் மீட்பு - 4 பேர் கைது!



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஓய்வு பெற்ற மின்வாரிய ஊழியர் காளிமுத்து வீட்டில் கடந்த மார்ச் மாதம் நடந்த திருட்டு வழக்கில், போலீசார் 4 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 38 பவுன் தங்க நகைகள், திருடப்பட்ட கார் மற்றும் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது. கண்காணிப்பு கேமரா காட்சிகள் மற்றும் தடயங்களின் அடிப்படையில் குற்றவாளிகளை கண்டுபிடித்த தனிப்படை போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் பாராட்டினார்.

## அதிமுகவில் இருந்து பொன் ஜெயசீலன் விலகல்!



சென்னை, ஜூலை. 04– கூடலூர் தொகுதி அதிமுக முன்னாள் எம். எல்.ஏ பொன் ஜெயசீலன், கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகுவதாகப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். சமீபகாலமாக அதிமுகவிலிருந்து முக்கியத் தலைவர்கள் விலகி வரும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. மேலும், பொன் ஜெயசீலன் விரைவில் தவெகவில் இணைவார் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. தொடர்ந்து அதிமுகவின் முக்கிய தலைவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து விலகி மாற்றுக் கட்சியில் இணைந்து வருகின்றனர். இதனிடையே, கட்சித் தலைமை மீது அவர்களுக்கு அதிருப்தி இருப்பதாகவும், அதன் காரணமாகவே பலரும் கட்சியில் இருந்து விலகி வருவதாகவும் கூறப்படுகிறது.

## ஆளுநரிடம் புகார்களை அடுக்கிய நயினார் நாகேந்திரன்!

சென்னை, ஜூலை. 04– சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் ஆளுநர் அர்லேகரை பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்தார். அப்போது, தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு பிரச்சனை தொடர்பாக அவர் ஆளுநரிடம் மனு அளித்தார். அவருடன் பாஜக மேலிடப் பொறுப்பாளர் அரவிந்த் மேனன் உள்ளிட்டோரும் உடன் இருந்தனர்.

இந்நிலையில், நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

• அரசு பொறுப்பில் ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டதை ஆளுநரிடம் சுட்டிக்காட்டினோம்.

• பெண் குழந்தைகளிடம் அமைச்சர் விஸ்வநாதன் நடந்த விதம் தவறு என எடுத்துக்கூறினோம்.

• ஆட்சிக்கு வந்து 54 நாட்களில் சட்டம், ஒழுங்கு கடுமையாக சீரழிந்து உள்ளது.

• தவெக ஆட்சியில் சொந்தக் கட்சியினரே பல வேறு குற்றங்களில் ஈடுபடுகின்றனர்.

• தவெக அரசை கலையுங்கள் என அவர்கள் சரியான நடவடிக்கைஎடுக்க தவறிவிட்டனர் எனக்கூறினோம்.



• தவெக அரசு குதிரை பேரம் நடத்த வேண்டிய அவசியம் என்ன?

• தவெக ஆட்சி பொறுப்பேற்று 55 நாளில் 100–க்கும் மேற்பட்ட வன்கொடுமை, கொலைகள் நடந்துள்ளதை எடுத்துக்கூ றினோம்.

• திமுக ஆட்சிக்கும் தவெக ஆட்சிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

• தமிழ்நாட்டில் தற்போது 7 தொகுதிகளில் இடைத்தேர்தல் வர வேண்டிய தேவை என்ன?

• ஆளுநர் எங்கெங்கு ஆய்வுசெய்யவேண்டுமென்று அமைச்சர் நிர்மல் குமார் கூற முடியாது.

• எங்கு வேண்டுமானாலும் ஆய்வு செய்ய முழு அதிகாரம் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.




பழனி பெரியப்பா நகரில் உள்ள நகராட்சி குப்பை கிடங்கில் அடிக்கடி தீப்பிடித்து எரிந்ததாலும் அடிக்கடி ஏற்பட்ட புகை மூட்டத்தாலும் அப்பகுதி பொது மக்கள் அவதி அடைந்தனர். இதையொட்டி திண்டுக்கல் சச்சிதானந்தம் எம்பி ஆய்வு செய்தார். அருகினில் நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி துணைத் தலைவர் கந்தசாமி ஆணையாளர் டிட்டோ உள்ளனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# யாரை கேட்டு பண்ணீங்க? மு.க.ஸ்டாலின் வார்னிங்!




சென்னை, ஜூலை. 04–

தமிழ்நாட்டில் தற்போது விஜய் தலைமையிலான தவெக அரசு நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் சட்டமன்ற தேர்தல் முடிவுகள் இந்தியா முழுவதும் பேசுபொருளாக மாறியது. ஆளுங்கட்சியாக இருந்த நிலையில், எதிர்க்கட்சியாக மாறியது மட்டுமின்றி கட்சியின் தலைவரான மு.க.ஸ்டாலினே தோற்றது திமுக–வினர் மத்தியில் ஆதங்கத்தையும், அதிர்ச்சியையும் உண்டாக்கியது.

**ஆட்சியைக் கவிழ்க்க பேரம்:**

தவெக அரசு மீது தொடர்ந்து விமர்சனங்களை திமுக முன்வைத்து வரும் சூழலில், தவெக அரசை கவிழ்ப்பதற்காக அந்த கட்சியின் எம்எல்ஏ–க்களிடம் பேரம் பேசப்பட்ட விவகாரம் தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதன் பின்னணியில் செந்தில் பாலாஜி இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகிறது. செந்தில் பாலாஜியின் சகோதரர் இந்த வழக்கில் முன்ஜாமின் கோரி யதுடன் தலைமறைவாகவும் உள்ளார்.

**கோபத்தின் உச்சியில் மு.க.ஸ்டாலின்:**

இந்த விவகாரம் குறித்து அறிந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மிகுந்த கோபம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏனென்றால், தவெக ஆட்சியை கவிழ்ப்பதற்காக எடுக்கப்பட்ட இந்த முயற்சி குறித்து அவருக்கே தெரியாமல் காய் நகர்த்தப்பட்டுள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளது.

**மகன், மருமகனுக்கு வார்னிங்:**

இதனால், தனது மகனும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், மருமகன் சபரீசன் உள்ளிட்ட மிக மிக நெருக்கமானவர்களுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தியுள்ளார். அந்த ஆலோசனையில் இந்த சம்பவத்தால் அவர் மிக கோபத்துடன் அவர்களை எச்சரித்ததாக கூறப்படுகிறது. எடப்பாடி பழனிசாமி ஆட்சியையே கவிழ்க்க விரும்பாத தான், நேர்வழியிலே ஆட்சியைப் பிடிக்க விரும்புவதாகவும், எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சர் ஆக்குவதும், தவெக ஆட்சியை கவிழ்ப்பதும் திமுக–வின் வேலை இல்லை என்றும் திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளார். மேலும், தான் லண்டனில் இருந்து திரும்பும் வரை தனக்குத் தெரியாமல் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ள கூடாது என்றும் அங்கிருந்த அனைவரையும் எச்சரித்துள்ளார்.

**அதிருப்தி:**

திமுக – அதிமுக கூட்டணி முயற்சி விவகாரத்தில் தொடக்கம் முதலே மு.க.ஸ்டாலினுக்கு உடன்பாடு இல்லாத சூழலில், அப்போது எடுக்கப்பட்ட முயற்சி வெளிவந்ததன் பின்னணியில் திமுக–விற்கு மிகப்பெரிய பின்னடைவை உண்டாக்கியது. அந்த விவகாரத்திலும் தனக்கு நெருக்கமான சிலர் மீது மு.க.ஸ்டாலின் ஆதங்கத்தில் உள்ளார்.

தவெக ஆட்சியை கவிழ்ப்பதற்கு 180 கோடி ரூபாய் அளவிற்கு பேரம் பேச சதித்திட்டம் தீட்டப்பட்டதாக தற்போதைய விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி இதுவரை எந்த கருத்தையும் வெளியிடவில்லை. மேலும், தனது மகன் மற்றும் மருமகனுடன் நடத்திய ஆலோசனையில் யாருடைய அறிவுறுத்தலில் சில முயற்சிகள் நடைபெற்று வருகிறது என்பதையும் தான் அறிவேன் என்றும், இதுபோன்ற விபரீத முயற்சிகள் இனிமேல் இருக்கவே கூடாது என்றும் எச்சரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


# FIFA உலகக் கோப்பை: இன்று நாக்அவுட் (ரவுண்ட் ஆஃப் 16) சுற்று தொடக்கம்!



2026 FIFA உலகக் கோப்பை கால்பந்து தொடரில் இன்று (ஜூலை 4) முதல் நாக்அவுட் சுற்றான ரவுண்ட் ஆஃப் 16 ஆட்டங்கள் தொடங்குகின்றன.


இந்த சுற்றில் தோல்வியடையும் அணிகள் நேரடியாக தொடரிலிருந்து வெளியேறும் என்பதால் போட்டிகள் மிகுந்த விறுவிறுப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் கனடா மொராக்கோ அணிகளும், மற்றொரு முக்கிய ஆட்டத்தில் பராகுவே பிரான்ஸ் அணிகளும் மோதுகின்றன. வெற்றி பெறும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்த ஆட்டங்கள் உலகம் முழுவதும் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.

# 23 பேரை பயங்கரவாதிகளாக அறிவித்த மத்திய அரசு!




புதுடெல்லி, ஜூலை 4:
இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு அச்சுறுத்தலாக இயங்கி வரும் 23 பேரை பயங்கரவாதிகளாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இவர்கள் பாகிஸ்தான் மற்றும் அதன் ஆதரவாளர்களுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளில் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பு, சட்டவிரோத செயல்பாடுகள் தடுப்பு சட்டம் (UAPA) கீழ் வெளியிடப்பட்டுள்ளது. இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

# சிறு சேமிப்புத் திட்டங்கள்: முதலீட்டாளர்களுக்கு ஜாக்பாட் செய்தி!




சென்னை, ஜூலை. 04–

ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலாண்டிற்கான வட்டி விகிதங்களை மத்திய அரசு மாற்றாமல் அப்படியே வைத்துள்ளது. பாதுகாப்பான முதலீட்டை விரும்பும் லட்சக்கணக்கான மக்களுக்கு இந்த முடிவு பெரும் நிம்மதியைத் தந்துள்ளது. குறிப்பாக, பொது வருங்கால வைப்பு நிதி (PPF) போன்ற பிரபலமான திட்டங்களுக்கு 7.1 சதவீத வட்டி தொடர்ந்து நீடிக்கிறது. வங்கிகளின் எஃப்டி (FD) வட்டி விகிதங்களில் மாற்றங்கள் இருந்தாலும், இந்தத் திட்டங்கள் மூலம் நிலையான லாபத்தை முதலீட்டாளர்கள் உறுதி செய்ய முடியும்.

# எ.வ.வேலு சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதி!




சென்னை, ஜூலை. 04–

முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு, இதயக் கோளாறு காரணமாக சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, சாலைப் பணிகளில் ரூ.3.2 கோடி முறைகேடு உள்ளிட்ட புகார்களின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவருடன் தொடர்புடைய 20 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. விசாரணைக்கு ஆஜராக கூடுதல் அவகாசம் வழங்கி புதிய தேதி அறிவிக்குமாறு லஞ்ச ஒழிப்புத்துறையிடம் அவரது தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

## சினிமா துளிகள்..!

# வில்லனாக நடிக்கப்போகும் பிரபல CSK வீரர்!




சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணியின் முன்னாள் முக்கிய போட்டியாளராக இருந்த ஒரு வீரர், இப்போது நடிக்க வருவதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் பெரும்பாலானோருக்கு பிடித்த ஐபிஎல் கிரிக்கெட் டீமாக இருக்கிறது சென்னை சூப்பர் கிங்க்ஸ். பல ஆண்டுகளாக சென்னை அணியை ஃபாலோ செய்து வருபவரகளுக்கு தெரியும், அதில் OG ப்ளேயர்ஸ் யாரெல்லாம் என்று. அப்படிப்பட்ட வீரர்களுள் ஒருவர்தான், முரளி விஜய்.

முரளி விஜய்

முரளி விஜய், தற்போது வில்லனாக நடிக்க ஒரு படத்தில் கமிட் ஆகியிருப்பதாக பேசப்படுகிறது. அதுவும் இந்த படத்தை ஒரு லெஜண்டரி இயக்குநர் இயக்க இருக்கிறார். அவர், சில தமிழ் படங்களிலும் வில்லனாக நடித்திருக்கிறார். அனுராக் காஷ்யப் இயக்கும் ஒரு படத்தில்தான், முரளி விஜய் வில்லனாக களமிறங்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த படத்திற்கு Unkill 123 என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறதாம். இதில் அனுராக் காஷ்யப்பே ஹீரோவாகவும் நடிக்கிறாராம். இந்த படத்தை வேல்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்த தகவலை ஐசரி கணேஷ் உறுதியும் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட், டோலிவுட் ;ரசிகர்களிடம் உச்சகட்ட எதிர்பார்ப்பு!

**ஹாலிவுட்**

'The Odyssey' திரைப்படம் ஜூலை மாத உலகளாவிய வெளியீட்டிற்காக ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**பாலிவுட்**

ஷாருக் கான், ஆலியா பட் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் 2026–ல் வெளியாகும் ஆக்ஷன் படங்களுக்காக தீவிரமாக தயாராகி வருகின்றனர்.

'Alpha' திரைப்படம் ஜூலை 10–ம் தேதி வெளியாக உள்ளது.

**கோலிவுட்**

விஜயின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்கிய முதல் படம் 'Sigma' ஜூலை 31–ம் தேதி வெளியாகிறது. வெளியீட்டுக்கு முன் அவர் உணர்ச்சிப்பூர்வமான பதிவு வெளியிட்டுள்ளார்.

ஆர். மாதவன் நடித்த 'G.D.N.' உட்பட 8 தமிழ்ப் படங்கள் ஜூலை 17–ம் தேதி ஒரே நாளில் வெளியாகவுள்ளதால் கடும் பாக்ஸ் ஆபிஸ் போட்டி உருவாகியுள்ளது.

**டோலிவுட்**

எஸ்.எஸ். ராஜமௌலி பிரான்சில் 'Julliat 2026' சர்வதேச கவுரவம் பெற்றுள்ளார்.

ராம் சரண் நடித்த 'Peddi' 2026–ம் ஆண்டின் முதல் பாதியில் தென்னிந்தியாவின் அதிக வசூல் செய்த படமாக உருவெடுத்துள்ளது.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 14 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12.88 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் , மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.நா.திருப்பதி ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட வன அலுவலர் மகேந்திரன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள. தமிழரசி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# விரைவில் வரும் புதிய தங்க முதலீட்டுத் திட்டம் பற்றிய 8 முக்கிய தகவல்கள்!




புதுடெல்லி, ஜூலை. 04–

மத்திய அரசு விரைவில் கொண்டுவரவிருக்கும் புதிய தங்க முதலீட்டுத் திட்டம் குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய 8 முக்கியத் தகவல்கள்

1/9

இனி வங்கிகளுக்கு மட்டுமின்றி, உங்கள் ஊரில் உள்ள நகைக் கடைகளிலும் உங்களின் தங்கத்தை முதலீடாக வழங்கும் புதிய வசதியை அரசு கொண்டுவரவுள்ளது.

2/9

பீரோவில் சும்மா இருக்கும் நகைகள் அல்லது தங்கக் கட்டிகளை இத்திட்டத்தில் ஒப்படைப்பதன் மூலம், அதற்கு அரசு வழங்கும் ஆண்டு வட்டியை நீங்கள் வருமானமாகப் பெறலாம்.

3/9

2015ல் தொடங்கப்பட்ட பழைய திட்டத்தில், மக்கள் தங்கள் பரம்பரை நகைகளை உருக்க விரும்பாததாலும், வரித்துறை சோதனைக் கெடுபிடிகளுக்குப் பயந்ததாலும் வெறும் 38 டன் தங்கம் மட்டுமே சேர்ந்தது.

4/9

இந்தியக் குடும்பங்களிடம் முடங்கிக்கிடக்கும் 25,000 டன் தங்கத்தில், குறைந்தது 5% அதாவது 1,250 டன் தங்கத்தையாவது இந்த முறை திரட்டிவிட வேண்டும் என அரசு திட்டமிட்டுள்ளது.

5/9

இத்திட்டம் வெற்றி பெற்றால், சுமார் 90 பில்லியன் டாலர் மதிப்புள்ள உள்நாட்டுப் பணம் புழக்கத்திற்கு வந்து நாட்டின் பொருளாதாரம் மற்றும் பணப்புழக்கம் பலமடையும்.

6/9

மக்கள் தங்கள் தங்கத்தை அரசுக்கு அளித்தால், வெளிநாடுகளில் இருந்து இந்தியா தங்கம் இறக்குமதி செய்வது அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குத் தேவைப்படாது.

7/9

தங்க இறக்குமதி குறைவதால், வெளிநாட்டு டாலருக்கான தேவை குறைந்து, சர்வதேச சந்தையில் இந்திய ரூபாயின் மதிப்பு கணிசமாக உயர வாய்ப்புள்ளது.

8/9

இதன் பின்னணியில் தான், நாட்டின் நலனைக் கருதி பொதுமக்கள் தங்களின் புதிய தங்கம் வாங்கும் திட்டத்தை ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்குமாறு பிரதமர் மோடி சமீபத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்திட்டம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும், இதற்கான வட்டி விகிதம் மற்றும் வரி விதிப்புச் சலுகைகள் குறித்த முழு விவரங்களும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசுத் தரப்பிலிருந்து வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# டெட் தேர்வர்களுக்கு முக்கிய அறிவிப்பு?



புதுடெல்லி, ஜூலை. 04–

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெறும் ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) 2026 இன்றும் நாளையும் நடைபெறுகிறது.தாள்–1 மற்றும் தாள்–2 தேர்வுகளில் மொத்தம் 2,29,129 தேர்வர்கள் பங்கேற்கின்றனர்.

தாள்–1: 222 மையங்களில் 61,386 பேர்

தாள்–2: 613 மையங்களில் 1,67,743 பேர்

மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு கூடுதல் 1 மணி நேரம் வழங்கப்படும். தேவையானவர்களுக்கு Scribe வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**முக்கிய விதிகள்:**

காலை 8.30 9.30 மணிக்குள் தேர்வு மையம் வர வேண்டும்.

9.30 மணிக்குப் பிறகு அனுமதி இல்லை.

தேர்வு நேரம்: காலை 10.00 மதியம் 1.00 மணி.

ஹால் டிக்கெட் மற்றும் புகைப்பட அடையாள அட்டை கட்டாயம்.

கருப்பு நிற பந்து முனை பேனா மட்டுமே அனுமதி.

செல்போன், ஸ்மார்ட்வாட்ச், கால்குலேட்டர் உள்ளிட்ட மின்னணு சாதனங்களுக்கு தடை.

பெல்ட், ஷூ, ஹை ஹீல்ஸ், டிஜிட்டல் வாட்ச் அணிந்து வரக்கூடாது; சாதாரண செருப்பு மட்டும் அனுமதி.

முறைகேட்டில் ஈடுபடுவோர் தேர்வில் இருந்து நீக்கப்படுவதுடன், எதிர்கால தேர்வுகளுக்கும் தடை விதிக்கப்படும்.



இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், களரி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் புதிதாக அமைக்கப்பட்ட தார் சாலையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020